# 3.10 பிறருக்கு உதாரத்துவமாகக் கொடுத்தல்

**வேத வசனம்:** கொடுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும். அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார்கள். நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும் என்றார். லூக்கா 6:38

**அறிக்கை:** நாம் பிறருக்குக் கொடுக்கும்போது, நிச்சயமாகவே திரும்பவும் பெற்றுக்கொள்ளுவோம்

**சத்தியம்:** தேவன் சொன்னார் வாங்குவதைப்பார்க்கிலும் கொடுப்பதே பாக்கியம். நம் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி நம் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்

## வேதப்பகுதி

2 கொரிந்தியர் 9:6-12
மல்கியா 3:8-10

## பாடக்குறிப்புகள்

* **விதைத்தலும் அறுத்தலும்** - லூக்கா 6:38
* **தேவன் தசமபாகத்தின் கொள்கையை உருவாக்கினார்** - மல். 3:8-10
* **பகிர்ந்தளிக்காத ஒரு வாழ்க்கை** - 2 கொரி. 9:6
* **உற்சாகமாகப் பகிர்ந்தளிக்கிற ஒரு வாழ்க்கை** - 2 கொரி 9:8
* **நைல் நதியைப்போல இருங்கள்** - யோவான் 7:38

## ஆர்வமூட்டும் வினாக்கள்

(ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கேள்விகளை விவாதிக்கலாம்)

- *அப். 20:35 நமக்கு என்ன சத்தியத்தைப் போதிக்கிறது?*
- *விதைத்தலையும் அறுத்தலையும் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?*
- *ஆசீர்வாதமாய் இருப்பதைப் பற்றி 2 கொரி 9:6-9 என்ன சொல்லுகிறது?*



## இலவசமாய்க் கொடுத்தல்

"என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படிக்குத் தசமபாகங்களையெல்லாம் பண்டகசாலையிலே கொண்டு வாருங்கள். அப்பொழுது நான் வானத்தின் பலகணிகளைத் திறந்து இடங்கொள்ளாமற் போகுமட்டும் உங்கள் மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்கமாட்டேனோவென்று, அதினால் என்னைச் சோதித்துப் பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்". பணத்தையும் பொருட்களையும் பிறருக்குக் கொடுப்பதைப்போல நேரத்தையும் தாலந்துகளையும் கூடப் பிறருக்குக் கொடுத்து உதவி செய்யலாம். உங்கள் தாலந்துகளைப் பிறருக்கு உதவி செய்ய எப்படிப் பயன்படுத்துவீர்கள்? ஏணியைப் பயன்படுத்திப் பிறருக்கு எந்த வழியில் உதவுவீர்கள் என்பதை வரிசைப்படுத்துங்கள்.

### செயல்

**தேவனின் அன்பை மற்றவர்களுக்கு பகிர வேண்டும் என்று அவர் விரும்புகிறார். பிறருக்குக் கொடுப்பது தேவனுக்கே கொடுப்பதாகும். இன்றைக்கு யாருக்காவது அன்பை கொடுக்க ஒரு வழியைக் கண்டுபிடியுங்கள்.**

### சிந்திக்க:

*பிறருக்குக் கொடுக்கும்போது உங்கள் வாழ்வு எப்படிச் செழிப்பாக மாற்றப்படுகிறது?*

______________________________

______________________________

### ஜெபம்:

*பிறருக்கு உற்சாகமாகக் கொடுக்கிற ஆவியைத் தேவன் உங்களுக்குத் தரும்படிக்கும் அதன் மூலமாகத் தேவ அன்பு வெளிப்படும்படிக்கும் ஒரு ஜெபத்தை எழுதுங்கள்.*

______________________________

______________________________